ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய கால்நடை மருத்துவர்களைப் பயன்படுத்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி நல்ல கேள்விதான். ஆகவே அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து வருகிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48 மற்றும் 49, தள்ளிவைக்கப்படுகிறது.

வினா எண் 50, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

50—

தொகுதிகளின் மறுவரையறை

***35352—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலுகா, விருத்தாசலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட 20 ஊராட்சி மன்றங்களைத் திரும்பவும் விருத்தாசலம் தொகுதியிலேயே சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2003 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 87-வது சட்டத்திருத்தத்தின்படி, ஒவ்வொரு மாநிலத்திலுள்ள மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகளை 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மாற்றி மறுவரையறை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

2004 பிப்ரவரி 12]

சட்டமன்றத் தொகுதிகளின் மறுவரையறை செய்யும் அதிகாரம், எல்லை மறுவரையறை ஆணையத்தின் வரம்பிற்குட்பட்டது. இதுகுறித்து, அரசு சார்பில் பரிந்துரைகள் செய்ய இயலாது. ஆனாலுங்கூட, அலுவல்சாரா உறுப்பினரான தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் மூலமாகவும், ஒருங்கிணைப்பு உறுப்பினர்களான மக்களவை சட்டமன்றப் பிரதிநிதிகள் மூலமாகவும் இந்தப் பரிந்துரையை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 51, திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

51—

துணை மின் நிலையம்

***31628—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, கரம்பயத்தில் 230 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, கரம்பயத்தில் 230 கி.வோ. துணை மின் நிலையம் நிறுவுவதற்கான கருத்துரு தற்போது வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. நிறுவுவதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

(ஆ) மின் வாரியத்தின் ஒப்புதல் வழங்கப்பட்ட பின், தமிழ்நாடு மின்சார வாரியம் மேல் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 52, திரு. வி. ஜெயராமன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.